02.06.2026.

O.S.No. 76/2023

PW1– தங்கப்பாண்டியன் – த/பெ. அருணகிரி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 02.06.2026.

<u>குறுக்கு விசாரணை :</u> ( 3ம் பிரதிவாதி தரப்பில்)

1. எனது மனைவிக்கு எழுதப்படிக்க தெரியாது. எனது மனைவிக்கு காதும் கேட்காது. அதனால் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனது மனைவி 5ம் வகுப்பு வரை சென்றுள்ளார், ஆனால் படிக்கத் தெரியாது. எனது மனைவிக்கு காது கேட்காது என்பதை நிரூபிக்க மருத்துவச்சான்று உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தற்போது என்கைவசம் தான் உள்ளது, அதை தாக்கல் செய்ய தயராக உள்ளேன். வழக்கிற்காக என் மனைவிக்கு காதுகேட்காது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. 3ம் பிரதிவாதியின் எதிர்உரையை படித்துப்பார்த்துள்ளேன். இந்த வழக்கில் சின்னராமையா வாரிசு சான்றிதழ் கேட்டு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அவரின் முதல்மனைவியின் பெயர் சிவனும்மாள் என்றால் சரிதான். மேற்படி நபர்களுக்கு நடராஜன் மற்றும் இந்த வழக்கு 3ம் பிரதிவாதி ஆண்வாரிசுகள் என்றால் சரிதான். அதைபோல் தங்கம், ராஜேஸ்வரி என்ற 2 பெண்வாரிசுகள் உள்ளது என்றால் சரியல்ல, தங்கம் மட்டும் தான் பெண்வாரிசு.

3. சின்னராமையாவின் குடும்ப உறவினர் நான் கிடையாது என்றால் சரியல்ல, அவர் எனக்கு மாமனார் மட்டும் என்றால் சரியல்ல, அவர் என் தந்தையின் சகோதரியின் கணவர். எனது தந்தையின் சகோதரியின் பெயர் லெட்சுமியம்மாள். லெட்சுமியம்மாளின் மகள் தான் வாதி என்றால் சரிதான், அவரும் மற்றும் 4ம் பிரதிவாதியும் மகள்கள். சின்னராமையா 1963ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருடைய மனைவி சிவனும்மாள் 1970ல இறந்துவிட்டார் என்றால் அவரது முதல்மனைவி 1970ல் இறந்துவிட்டார். நான்கூறும் லெட்சுமியம்மாள் 1965ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

4. நான், சின்னராமையாவும், லெட்சுமியம்மாளும் கணவன் மனைவி என்பதை நிருபிக்க திருமண பத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், நான் லெட்சுமியம்மாளின் இறப்புசான்றிதழை தாக்கல் செய்துள்ளேன், அதில் கணவரின் பெயர் சின்னராமையா என்று உள்ளது. சின்னராமையா தேவர் இறக்கும் வரை மனைவி சிவனும்மாள் உயிருடன் இருந்ததாலும், அவருக்கு 4 வாரிசுகள் இருந்ததாலும் அவர் இரண்டாவதாக யாரையும் திருமணம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ.4 ஆவணம் எனது மனைவியின் ஆதார் அட்டை என்றால் சரிதான். அதில் உள்ள புகைப்படம் எனது மனைவியின் தற்போதைய புகைப்படம் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆதார் அட்டையை எப்போது புதுப்பித்தேன் என்றால் புதுப்பிக்கவேயில்லை. வா.சா.ஆ.4 ஆவணம் எந்த ஆண்டு எடுக்கப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.4 ஆவணம் எப்போது எடுக்கப்பட்டது என்று எனது மனைவியை

விசாரித்தால் தான் தெரியவரும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணம் வழக்கிற்காக போலியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

6. என்னிடம் காட்டப்படும் ஆதார் அட்டையின் நகல்தான் பழைய ஆதார் அட்டை என்றால் சரிதான். அதன் அசல் என்வசம் உள்ளது என்றால் சரிதான். ***(இந்நீதிமன்றம் வா.சா.ஆ.4, அதன் அசல், சாட்சியிடம் காண்பிக்கப்பட்ட ஆவணங்களை பார்க்கையில், மூன்றும் ஒரே ஆவணம் தான் என்று தெரியவருகிறது)*** **சாட்சியிடம் காண்பிக்கப்பட்ட ஆதார் அட்டையின் நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. எனது தாயாரின் பெயர் அழகம்மாள் என்றால் சரிதான். எனது தாயார், என்னிடமும், எனது சகோதரரிடமும் ஜீவனாம்சம் வேண்டி மாவட்ட ஆட்சித்தலைவரிடம் மனு கொடுத்தார் என்றால் சரிதான். அந்த மனுவில் 14.01.2023 ல் உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரிதான். அந்த உத்தரவில் நானும், என் சகோதரரும் ரூ.5,000/— எனது தாயாருக்கு கொடுக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருந்தது என்றால் சரிதான், அதன்படி நாங்கள் நடந்துவருகிறோம் என்றால் சரிதான். அந்த மனுவிசாரணைக்கு நான் நேரடியாக ஆஜரானேன் என்றால் சரிதான்.

8. எனக்கு வாதி மட்டும்தான் மனைவி என்றால் சரிதான். மேற்படி விசாரணையின்போது, எனது மனைவியின் மருத்துவசெலவுக்காக கஷ்டப்படுவதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விசாரணையின்போது எனது மனைவி மனநோயாளி என கட்சி செய்தேன்

என்றால் சரிதான். எனது மனைவி மனநல சிகிச்சை பெற்றதற்கான ஆவணம் என்கைவசம் உள்ளது என்றால் சரிதான். தற்போதும் என் மனைவி சிகிச்சை எடுத்துவருகிறார் என்றால் சரிதான்.

9. என் மனைவி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே மனநல சிகிச்சை செய்துவந்தார் என்றால் சரிதான். என் மனைவி மனநோயாளி என்பதை மறைத்துதான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் என் மனைவியை விசாரித்தால் மனநோயாளி என தெரிந்துவிடும் என்பதால் தான் அவரை விசாரிக்காமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சின்னராமையாவின் வாரிசுசான்றிதழ் வேண்டி வட்டாட்சியரிடம் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி மனுவை நிராகரித்த உத்தரவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி மனுவை தள்ளுபடி செய்யப்படதற்கான காரணம் இந்த வழக்கு வாதி சின்னராமையாதேவரின் வாரிசு இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால்தான் அந்த உத்தரவு நகலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 மற்றும் 8 ஆவணங்கள் இந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை அனுசரித்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவு என்றால் சரிதான். எனவே ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யப்பட்டபின்பு வா.சா.ஆ.6 மற்றும் 8 ஆவணங்கள் செல்லாது என்றால் சரியல்ல.

10. ஏற்கனவே விசாரணை செய்திருந்தால் ஒருதலைபட்ச உத்தரவு கிடைத்தபின்பு மீண்டும் விசாரித்து வட்டாட்சியர் சான்றிதழ் வழங்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. சான்றிதழக்காக வட்டாட்சியர் எங்கள் ஊரை சார்ந்த யாரை விசாரித்தார் என்றால் எனக்கு தெரியாது. அப்படி ஒரு விசாரணை நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

11. வா.சா.ஆ.5 ஆவணத்தை பற்றி எனது பிராதில் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தில் கண்ட சொத்து சின்னராமையா தேவருக்கு பாத்தியப்பட்டது கிடையாது என்றால் சரியல்ல. எனவே எனது வழக்கு பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

12. சின்னராமையா தேவர் இறந்தபின்பு அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல, எனது மனைவி அனுபவித்தார், தற்போது சுமார் 5 ஆண்டுகளாக அனுபவிக்கவில்லை. சின்னராமையா தேவரின் சொத்துக்களில் எனது மனைவியின் பெயர் கூட்டுப்பட்டாவில் கிடையாது என்றால் சரிதான், அது சின்னராமையா தேவரின் தந்தை வழிச்சொத்து. இந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவின் அடிப்படையில் வழங்கப்பட்ட வாரிசுசான்றிதழ்படி சின்னராமையா தேவரின் சொத்துக்களில் எனது மனைவியின்பெயர் கூட்டுப்பட்டாவில் சேர்க்கப்பட்டுள்ளது.

13. சின்னராமையா தேவரின் சொத்துக்களை அடைய வேண்டும் என்பதற்காகதான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல, பாகத்தை கேட்டுதான் தாக்கல் செய்துள்ளேன். 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை நான் அடைய வேண்டும் என்பதற்காகதான் இந்த வழக்கை என் மனைவி பெயரில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**